AC5
15/12/23

**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – "மிக்ஜாம்" புயல் – சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில், மிக்ஜாம் புயலின் காரணமாக ஏற்பட்ட கனமழை முதல் அதி கனமழையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு – குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் நிவாரணத் தொகை வழங்க மொத்தமாக ரூ.1486,93,74,000/– மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2**

**அரசாணை (நிலை) எண்.587** **நாள் 15.12.2023**
**சோபகிருது வருடம், கார்த்திகை 29**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்க:**

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண். 2470, நாள்: 09.12.2023
2. அரசாணை (நிலை) எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.12.2023.
3. அரசாணை (நிலை) எண்.584, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 12.12.2023.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின்_கடித. எண். இஇ. 1(2)/ 1553/2023, நாள் 14.12.2023.

*****

**ஆணை:–**

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்: –

i) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மக்கள் தொகை மிகுதியான மற்றும் குடியிருப்புகள் அடர்த்தியான பகுதிகளை வெள்ள நீர் சூழ்ந்ததால் பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியே வரமுடியாமல் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு அவதிக்குள்ளாயினர். பொதுமக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வாழ்வாதார இழப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, மேலே

(த.பி.பா.)

முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் செய்தி வெளியீட்டில், மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.6,000/– வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள், மிக்ஜாம் புயலின் காரணமாக தங்கள் மாவட்டங்களில் மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட / இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள் / பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்களை இழந்த கீழ்கண்ட பகுதிகளில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு ரூ.6000/– நிவாரணத் தொகை வழங்குமாறும் கோரியுள்ளனர்:–

(அ) **சென்னை மாவட்டம்**: அனைத்து வட்டங்கள்;

(ஆ) **செங்கல்பட்டு மாவட்டம்:** தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும் மற்றும் திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்களும்;

(இ) **காஞ்சிபுரம் மாவட்டம்:** குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்களும்;

(ஈ) **திருவள்ளூர் மாவட்டம்**: பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆவடி பூவிருந்தவல்லி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் ஆகிய ஆறு வட்டங்கள்.

iii) பேரிடர் காலங்களில் பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு நிவாரணம் வழங்க மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, வெளியிடப்பட்டுள்ள மாநில பேரிடர் நிவாரண நிதியின் மீட்பு மற்றும் நிவாரணம் என்ற தலைப்பின் கீழ் நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது.

iv) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உள்ள ஆணைக்கிணங்க, மேலே பத்தி 1(ii)–இல் குறிப்பிட்டுள்ள பகுதிகளில், நிவாரணத் தொகை பெறக்கூடிய பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது :–

| வ. எண் | மாவட்டம் | மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை | அரசாணை எண். 584, வருவாய் (ம) பே.மே.துறை, நாள். 12.12.2023–இன் படி நிவாரணம் பெற தகுதியான குடும்பங்களின் எண்ணிக்கை | விண்ணப்பம் பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 17,28,739 | 13,72,509 | 3,56,230 |
| 2 | திருவள்ளூர் | 6,65,596 | 6,08,726 | 56,870 |
| 3 | செங்கல்பட்டு | 4,08,572 | 3,12,952 | 95,620 |
| 4 | காஞ்சிபுரம் | 1,51,362 | 1,31,149 | 20,213 |
| | **மொத்தம்** | **29,54,269** | **24,25,336** | **5,28,933** |

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் பின்வருமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்:–

a) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக பெறப்பட்ட பட்டியல்களின் படி மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட / இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து, துணிமணிகள் / பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த குடும்பங்களுக்கு (ஒன்றிய, மாநில அரசு / மற்ற பொதுத்துறை நிறுவன உயர் அலுவலர்கள், வருமான வரி செலுத்துவோர் மற்றும் சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்கள் ஆகியோர் நீங்கலாக) குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் நிவாரண நிதியாக வழங்க ரூ.1455,20,16,000/– தொகையும்,

b) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் படி, நிவாரணம் கோரி விண்ணப்பங்கள் பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படும் குடும்பங்களில் உத்தேசமாக 10% குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் நிவாரணத் தொகை வழங்க ரூ.31,73,58,000/– தொகையும்,

c) மொத்தம் ரூ.1486,93,74,000/– மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யவும்,

d) இந்த நிவாரணத் தொகையினை நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்க ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநருக்கு விடுவிக்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:–

a) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக பெறப்பட்ட பட்டியல்களின் படி மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட / இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து, துணிமணிகள் / பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த குடும்பங்களுக்கு (ஒன்றிய, மாநில அரசு / மற்ற பொதுத்துறை நிறுவன உயர் அலுவலர்கள், வருமான வரி செலுத்துவோர் மற்றும் சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்கள் ஆகியோர் நீங்கலாக) குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் நிவாரண நிதியாக வழங்க ரூ.1455,20,16,000/– தொகையும்,

b) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் படி, நிவாரணம் கோரி விண்ணப்பங்கள் பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படும் குடும்பங்களில் உத்தேசமாக 10% குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/– வீதம் நிவாரணத் தொகை வழங்க ரூ.31,73,58,000/– தொகையும்,

c) மொத்தம் ரூ.1486,93,74,000/– (ரூபாய் ஆயிரத்து நானூற்று எண்பத்தாறு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து எழுபத்து நான்காயிரம் மட்டும்)

(த.பி.பா.)

மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது;

d) இந்த நிவாரணத் தொகையினை நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்க ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநருக்கு விடுவிக்கவும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2245 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 – வெள்ளம், புயல் முதலியவை – 101 – கருணை உதவி – மாநிலச் செலவினங்கள் – AE – வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவித் தொகை அளித்தல் – 356 – உணவளித்தல் ரொக்கத் தொகை – 01– உணவளித்தல் ரொக்கத்தொகை.

[IFHRMS த.தொ.கு.2245 02 101 AE 35601]".

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1486,93,74,000/–, 2023–2024 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2023–2024 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2023–2024 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்/வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.627119/ நிதி(வருவாய்)/2023, நாள்.15.12.2023 பெறப்பட்ட இசைவு மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1510 (ஆயிரத்து ஐநூற்று பத்து) உடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No.2023121510)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை–600 005.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நீர்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
பொதுப் பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இயக்குநர், (பேரிடர் மேலாண்மை),
தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–5.
ஆணையர், உணவுப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சேப்பாக்கம், சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
12, தம்புசாமி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை –600010.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
என்.வி.நடராஜன் மாளிகை, கீழ்ப்பாக்கம், சென்னை –600010.
மாவட்ட ஆட்சியர்கள், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு),
சென்னை–600 008/600 001/600 035.
மாவட்ட கருவூல அலுவலர்கள், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018/600 035.

**நகல்**

வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
நிதி/(வருவாய்/வ.செ.பொ.1/வ.செ.பொ.2/வ.வ.I)த் துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

15/12/23

**(து. நடராஜன்)**
**அரசு சார்புச் செயலாளர்**

15/12/23